# சிரியா குண்டு வீச்சுக்கு எதிராக அமெரிக்காவில் போராட்டம்

நியூயார்க்,ஏப்.16–

ரசாயன இடங்களை குறிவைத்து சிரியா மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அமெரிக்காவில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

சிரியா மீது கடந்த 13 ந் தேதி இரவு அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய 3 நாடுகள் இணைந்து ராக்கெட் மற்றும் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. டமாஸ்கஸ் அருகே கிளர்ச்சியாளர்கள் வசமிருக்கும் கிழக்கு கூட்டாவில் துமா நகரை கைப்பற்ற சிரியா ராணுவம் அங்கு ரசாயன தாக்குதல் நடத்தியது. அதில் 70 பேர் பலியாகினர்.

அதிபர் ஆசார் அல் ஆசாத்துக்கு எதிராக இத்தாக்குதல் நடத்தப்பட்டது. மேலும் ரசாயன ஆயுத கிடங்குகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளிட்ட நிலைகளை குறிவைத்து 100க்கும் மேற்பட்ட ராக்கெட்டுகள் வீசப்பட்டன. சிரியா மீது நடத்தப்பட்ட இத்தாக்குதலுக்கு அமெரிக்காவில் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. நியூயார்க்கில் யூனியன் சதுக்கத்தில் ஏராளமானோர் திரண்டு குண்டு விச்சுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதில் நியூயார்க் சிட்டி பல்கலைக்கழகத்தின் கியூன்ஸ் கல்லூரி பேராசிரியர் லார்டன் பிரான்ஸ் கலந்து கொண்டார். அவர் கூறும் போது, அமெரிக்காவின் ராணுவ தாக்குதலால் சிரியாவில் பிரச்சினையை தீர்க்க முடியாது. எனவே இத்தாக்குதலை எதிர்க்கிறேன். மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்கா தேவையின்றி தலையிடுவது இது ஒரு உதாரணம் ஆகும்.

அமெரிக்காவில் அகதிகள் குடியேற்றத்தை ஆதரிக்கிறேன். சிரியா மட்டுமின்றி மற்ற நாடுகளில் இருந்தும் அகதிகள் வருவதற்கு அமெரிக்காவும் ஒரு காரணம். தற்போது நடத்தப்பட்டுள்ள குண்டு வீச்சில் அப்பாவி பொது மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர்'' என்றார். இதே கருத்தை போராட்டத்தில் கலந்துகொண்ட பலரும் தெரிவித்தனர்.

# சிறப்பு அந்தஸ்து கோரி ஆந்திராவில் இன்று முழு அடைப்பு போராட்டம்

## சாலைகள் வெறிச்சோடின, கடைகள் அடைப்பு



அமராவதி,ஏப்.16–

ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கக் கோரி ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சார்பில் இன்று முழு அடைப்பு போராட்டம் நடைபெறுகிறது.

ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கி, கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யக்கோரி அம்மாநிலத்தில் முழு அமைப்பு போராட்டம் நடந்து வருகிறது. இதனால் அங்கு வாகனப்போக்குவரத்து முடங்கியுள்ளதுடன், கடைகளும் அடைக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஆந்திர மாநிலம் ஆந்திரா, தெலுங்கானா என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அப்போது ஆந்திராவுக்கு சிறப்பு நிதி, சிறப்பு அந்தஸ்து வழங்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டது. ஆனால், ஆண்டு பலவாகியும் சிறப்பு அந்தஸ்தை வழங்கவில்லை என்று ஆந்திர முதல்வரும் தெலுங்கு தேசம் கட்சியின் தலைவருமான சந்திரபாபு நாயுடு புகார் கூறினார். அத்துடன் மத்தியில் பாரதீய ஜனதா கூட்டணியில் இருந்து விலகினார்.

இதற்கிடையில், ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்க கோரி நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடரில் தெலுங்கு தேசம் எம்.பிக்கள் தினமும் போராட்டம் நடத்தினர். ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் எம்.பி.க்களும் போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில் ஆந்திராவுக்கு சிறப்பு அந்தஸ்து கோரி இன்று முழுஅடைப்பு போராட்டம் நடந்து வருகிறது. ஆந்திரபிரதேச பிரத்யேக ஹோடா சாதனா சமிதி அழைப்பு விடுத்துள்ள போராட்டத்திற்கு, காங்கிரஸ், ஒய்எஸ்ஆர் காங்கிரஸ், இடதுசாரிகட்சிகள் ஆதரவு தெரிவித்து உள்ளன.

இதனால், ஆந்திர மாநிலத்தின் பல பகுதிகளிலும் சாலைகள் வெறிச்சோடியுள்ளன. பெரும்பலான கடைகள் அடைக்கப்பட்டுள்ளன. முழு அடைப்பையொட்டி ஆந்திர மாநிலம் முழுவதும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. திருப்பதியில் வாகனங்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டன. எனினும் போராட்டத்திற்கு ஆளும் தெலுங்குதேசம் ஆதரவு தெரிவிக்கவில்லை.

ஆனால் முழுஅடைப்பு போராட்டம் நடத்துவது மாநிலத்தின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் என்று முதல்வர் சந்திரபாபு நாயுடு எதிர்ப்பு தெரிவித்து உள்ளார். இதற்கு ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி கண்டனம் தெரிவித்து உள்ளது.

# ஸ்மார்ட்போன் பயன்படுத்தினால் மன அழுத்தம் ஏற்படும்

வாஷிங்டன்,ஏப்.16–

**ஸ்மார்ட்போன் பயன்பாடு குறித்து மாணவர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளது.**

அமெரிக்காவின்சான்பிரான்சிஸ்கோ மாகாண பல்கலைக்கழக ஆராய்ச்சி பிரிவு மாணவர்கள் எரிக் பெப் தலைமையில் ஸ்மார்ட்போன் பயன்பாடு குறித்து ஆய்வு நடத்தினார்கள். 135 மாணவர்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. அதில் அளவுக்கு அதிகமாக ஸ்மார்ட்போன் பயன்படுத்துவோருக்கு தனிமை, கவலை, மனஅழுத்தம் ஆகிய உணர்வுகள் அதிகமாக இருந்தது.

போதைப் பொருளுக்கு ஒருவர் எப்படி படிப்படியாக அடிமையாவாரோ அதே போன்று ஸ்மார்ட்போனுக்கு அடிமையாகி அதை அதிகம் பயன்படுத்துவதும் கண்டறியப்பட்டது. முதலில் மூளையில் உள்ள நரம்பு மண்டலங்களில் பாதிப்பு ஏற்பட தொடங்கும். பின்னர் போதை பொருட்களால் உடல் நலம் கெடுவது போன்ற பாதிப்பு ஏற்பட்டது.

ஆய்வில் பங்கேற்ற 135 மாணவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், ஸ்மார்ட்போன்களை பயன்படுத்தும் மாணவர்களிடம் தனிமை, கவலை மற்றும் மனஅழுத்தம் போன்ற உணர்வுகள் அதிகளவு இருந்தது கண்டறியப்பட்டுள்ளது. பொதுவாக தனிமை உணர்வு சக மனிதர்களிடம் முகம் கொடுத்து பேசுவதற்கு மாற்றாக இருக்கிறது.

இதே மாணவர்கள் படிப்பது, வீடியோ பார்ப்பது, உணவு உட்கொள்வது மற்றும் வகுப்புகளை கவனிக்கும் போது என ஒரே நேரத்தில் பல பணிகளை செய்வதில் சிறப்பாக செயல்பட்டுள்ளனர் என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறான தொடர் நடவடிக்கைகள் அவர்களின் உடல் மற்றும் மனதிற்கு தேவையான ஓய்வை வழங்க சிறிது நேரம் மட்டுமே வழங்கும் என பெப்பர் தெரிவித்துள்ளார்.மேலும் இதுபோன்ற நடவடிக்கை செமி டாஸ்கிங்க்கு வழி செய்யும் என அவர் தெரிவித்துள்ளார். செமிடாஸ்கிங் என்பது பல பணிகளை ஒரே நேரத்தில் குறைந்த கவனத்தில் செய்வது ஆகும்.

இதனால் எந்த பணியையும் முழுமையாகவோஅல்லது சரியாகவோ செய்ய முடியாது. ஸ்மார்ட்போன்களில் புஷ் நோட்டிபிகேஷன்கள், வைப்ரேஷன்கள் மற்றும் இதர அலெர்ட்கள் தான் ஸ்மார்ட்போன் திரையை அடிக்கடி பார்க்க வழி செய்கின்றன.

அந்த வகையில் ஸ்மார்ட்போன் பயன்பாடுகளை குறைக்க புஷ் நோட்டிபிகேஷன்களை ஆப் செய்து வைக்கலாம். இதன் மூலம் மிக முக்கிய சேவைகளில் மட்டும் நேரத்தை செலவழிக்க முடியும்.



முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமியை இன்று தலைமைச் செயலகத்தில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.வயிரவன், செயலாளர் அரு. வெங்கடாசலம், துணைத் தலைவர் பி.மயிலவேலன், இணைச் செயலாளர் அ.குமரன் ஆகியோர் சந்தித்து, ஹார்டுவோர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்காக 2 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினர். முன்னாள் அமைச்சர் வைகைச் செல்வன் உடன் உள்ளார்.

# மெக்கா மசூதி மீது வெடிகுண்டு தாக்குதல் நடத்திய வழக்கு: குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் விடுதலை

ஐதராபாத்,ஏப்.16–

**மெக்கா மசூதி மீது வெடிகுண்டு தாக்குதல் நடத்திய வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.**

கடந்த 2007, மே 18 ம் தேதி சார்மினாருக்கு அருகில் இருந்த மெக்கா மசூதியில் வெள்ளிக்கிழமை தொழுகை நடந்து கொண்டிருந்தபோது சக்திவாய்ந்த வெடிகுண்டு வீசப்பட்டது. இந்த சம்பவத்தில் 9 பேர் உயிரிழந்தனர். 58 பேர் காயமடைந்தனர்.

இந்த குண்டுவெடிப்பின்போது வெடிக்காத 2 சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளையும் போலீசார் பறிமுதல் செய்தனர். இதோடு மசூதிக்கு வெளியே போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலும் 5 பேர் உயிரிழந்தனர். இந்து அமைப்பைச் சேர்ந்த அசீமானந்த், தேவேந்திர குப்தா, லோகேஷ் ஷர்மா, பாரத்பாய், ரஜேந்தர் செயத்ரி உள்ளிட்ட 8 பேர் இந்த குண்டு வெடிப்பில் தொடர்புள்ளவர்கள் என்று என்.ஐ.ஏ குற்றம்சாட்டியது. குற்றவாளிகளில் சுனில் ஜோஷி விசாரணையின் போதே படுகொலை செய்யப்பட்டார். சந்தீர் வி. டங்கே, மத்திய பிரதேசத்தை சேர்ந்த ராம்சந்திர கல்சங்கரா இரண்டு பேரும் விசாரணையில் இருந்து தப்பினர். ஏனைய 5 பேர் மீது ஐதராபாத்தில் உள்ள என்.ஐ.ஏ நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது.

விசாரணை முடிந்ததையடுத்து, இன்று தீர்ப்பு வழங்குவதாக நீதிமன்றம் அறிவித்தது. தீர்ப்பு வழங்கப்படுவதையொட்டி, நீதிமன்ற வளாகத்திற்கு குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் அழைத்து வரப்பட்டு இருந்தனர்.

நீதிமன்றத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. நண்பகல் அளவில் தீர்ப்பு அளித்த என்.ஐ.ஏ நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்து உத்தரவிட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக போதுமான ஆதாரங்கள் இல்லை என கூறி நீதிமன்றம் விடுதலை செய்வதாக அறிவித்தது.

# ராகுல்காந்தி விரைவில் பிரதமர் ஆவார்: நாஞ்சில் சம்பத் ஆருடம்

வாலாஜா,ஏப்.16–

ராகுல்காந்தி இந்தியாவின் பிரதமராகும் காலம் வெகு தொலைவில் இல்லை என நாஞ்சில் சம்பத் கூறினார்.

வாலாஜா காந்தி சதுக்கத்தில் இலக்கிய விழா நடந்தது. சிறப்பு விருந்தினராக நாஞ்சில் சம்பத் பங்கேற்றார். காந்தியத்தை புரிய வைத்த ராகுல்காந்தி என்ற தலைப்பில் அவர் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

ராகுல் காந்தி காங்கிரஸ் கட்சியின் தலைமை பொறுப்பை ஏற்றதும் எனது தந்தை ராஜீவ்காந்தியை கொன்றவர்களை நான் மன்னித்து விட்டேன் என்று கூறியதை கேட்டு நான் அகம் மகிழ்ந்தேன். 26 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் அடைபட்டு கிடக்கும் 7 பேர் விடுதலை ஆவார்கள் என நினைத்து பெரு மகிழ்ச்சியடைந்தேன்.

காந்திய வழியில் ராகுல்காந்தி என நான் எனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டேன். உலக நாடுகளில் 70 நாடுகள் மரணத் தண்டனையை ரத்து செய்து விட்டன. இங்கிலாந்து நாட்டின் சட்ட திட்டங்களை நம் நாடு பின்பற்றுகிறது. அப்படியிருக்க இங்கிலாந்தில் மரணத் தண்டனை ஒழிக்கப்பட வேண்டும்.

தந்தையைக் கொன்றவர்களை மன்னித்து விட்டேன் என ராகுல் காந்தி கூறும்போது, அவர் மகாத்மா காந்தி நிலைக்கு உயர்ந்து விட்டார் என நான் கருதுகிறேன். ராஜீவ்காந்தி இளம் வயதில் இந்தியாவின் பிரதமராக உயர்ந்தார். அவரைப் போலவே ராகுல் காந்தியும் இந்தியாவின் பிரதமராகும் காலம் வெகு தொலைவில் இல்லை.

இவ்வாறு அவர் பேசினார்.

# தமிழக வீரர்களுக்கு ரூ.2.2 கோடி பரிசு...

*(1–ம் பக்கத் தொடர்ச்சி)*

தொகையைத் தவிர இது வழங்கப்படும்.

மீண்டும் உங்களை பாராட்டுகிறேன். எதிர்காலத்தில் நாட்டின் சார்பில் இது மாதிரி பல வெற்றிகளைக் குவிக்க இதயப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்' என்று அதில் எடப்பாடி கூறியுள்ளார்.

### தனித்தனி பாராட்டு

இதேபோல பதக்கங்கள் பெற்றிருக்கும் ஒவ்வொரு வீரர்–வீராங்கனையையும் தனிப்பட்ட முறையிலும், தமிழக மக்கள் சார்பிலும் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி பாராட்டியிருக்கிறார்.

இது சம்பந்தமாக அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் வாழ்த்து கடிதங்களையும் அனுப்பி இருக்கிறார்.

### சத்யன்

மேசைப்பந்து ஆடவர் இரட்டையர் பிரிவில் வெள்ளிப்பதக்கம் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவில் வெண்கலப் பதக்கமும் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர் சத்தியனுக்கு 50 லட்சம் ரூபாய் உயரிய ஊக்க தொகை அறிவித்து இன்று வாழ்த்துக் கடிதம் அனுப்பி உள்ளார்.

புரட்சித் தலைவி அம்மா, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வெல்லும் வீரர்களுக்கு ரூ.30 லட்சம், வெண்கலப் பதக்கம் வெல்லும் வீரர்களுக்கு ரூ.20 லட்சம் வழங்கப்படும் என்று பரிசுத் தொகையை உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, இந்த உயர் ரொக்க ஊக்கத் தொகையை அதாவது ரூ.50 லட்சத்தை பெறுவதற்கு நீங்கள் தகுதியாகிறீர்கள்.

வீரர்களை ஊக்குவித்து அவர்களை உலகளவில் மேம்படுத்துவதற்காக நான் ஏற்கனவே அறிவித்திருக்கும் ரூ.50 லட்சம் பரிசுத் தொகையைத் தவிர இது வழங்கப்படும். மீண்டும் உங்களை பாராட்டுகிறேன். எதிர்காலத்தில் நாட்டின் சார்பில் இது மாதிரி பல வெற்றிகளைக் குவிக்க இதயப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்று அதில் எடப்பாடி கூறியுள்ளார்.

### தீபிகா கார்த்திக்

ஸ்குவாஷ் மகளிர் இரட்டையர் பிரிவில் வெள்ளிப்பதக்கம் மற்றும் ஸ்குவாஷ் கலப்பு இரட்டையர் பிரிவில் வெள்ளிப் பதக்கமும் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர் தீபிகா கார்த்திக்குக்கு 60 லட்சம் ரூபாய் உயரிய ஊக்க தொகை அறிவித்து இன்று வாழ்த்துக் கடிதம் அனுப்பி உள்ளார்.

புரட்சித் தலைவி அம்மா, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளி பதக்கம் வெல்லும் வீரர்களுக்கு ரூ.30 லட்சம் வழங்கப்படும் என்று பரிசுத் தொகையை உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, இந்த உயர் ரொக்க ஊக்கத் தொகையை அதாவது ரூ.60 லட்சத்தை பெறுவதற்கு நீங்கள் தகுதியாகிறீர்கள். மீண்டும் உங்களை பாராட்டுகிறேன். எதிர்காலத்தில் நாட்டின் சார்பில் இது மாதிரி பல வெற்றிகளைக் குவிக்க இதயப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்று அதில் எடப்பாடி கூறியுள்ளார்.

### சவுரவ் கோஷல்

ஸ்குவாஷ் கலப்பு இரட்டையர் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர் சவுரவ் கோஷலுக்கு 30 லட்சம் ருபாய் உயரிய ஊக்க தொகை அறிவித்து இன்று வாழ்த்துக் கடிதம் அனுப்பி உள்ளார்.

புரட்சித் தலைவி அம்மா, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளி பதக்கம் வெல்லும் வீரர்களுக்கு ரூ.30 லட்சம் வழங்கப்படும் என்று பரிசுத் தொகையை உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, இந்த உயர் ரொக்க ஊக்கத் தொகையை பெறுவதற்கு நீங்கள் தகுதியாகிறீர்கள். மீண்டும் உங்களை பாராட்டுகிறேன். எதிர்காலத்தில் நாட்டின் சார்பில் இது மாதிரி பல வெற்றிகளைக் குவிக்க இதயப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்று அதில் எடப்பாடி கூறியுள்ளார்.

### ஜோஸ்னா சின்னப்பா

ஸ்குவாஷ் மகளிர் இரட்டையர் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர் ஜோஸ்னா சின்னப்பாவுக்கு 30 லட்சம் ருபாய் உயரிய ஊக்க தொகை அறிவித்து இன்று வாழ்த்துக் கடிதம் அனுப்பி உள்ளார்.

புரட்சித் தலைவி அம்மா, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளி பதக்கம் வெல்லும் வீரர்களுக்கு ரூ.30 லட்சம் வழங்கப்படும் என்று பரிசுத் தொகையை உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டார். ஆகவே, இந்த உயர் ரொக்க ஊக்கத் தொகையை பெறுவதற்கு நீங்கள் தகுதியாகிறீர்கள். மீண்டும் உங்களை பாராட்டுகிறேன். எதிர்காலத்தில் நாட்டின் சார்பில் இது மாதிரி பல வெற்றிகளைக் குவிக்க இதயப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்று அதில் எடப்பாடி கூறியுள்ளார்.

## பிரதமர் மோடிக்கு கண்டனம்

# ஆமதாபாத்தில் நாளை தொகாடியா உண்ணாவிரதம்

ஆமதாபாத்,ஏப்.16–

**பிரதமர் நரேந்திர மோடிக்கு கண்டனம் தெரிவித்து தொகாடியா, ஆமதாபாத்தில் நாளை காலவரையற்ற உண்ணாவிரதம் தொடங்குகிறார்.**

விசுவ இந்து பரிஷத் அமைப்பின் சர்வதேச தலைவர் தேர்தலில் தனது வேட்பாளர் தோல்வி அடைந்ததால், அதன் செயல் தலைவராக இருந்த பிரவீண் தொகாடியா விசுவ இந்து பரிஷத் அமைப்பில் இருந்து விலகினார். 'விசுவ இந்து பரிஷத்தில் நான் இனி இல்லை, தொடர்ந்து இந்துக்களின் நலனுக்காக போராடுவேன். நாளை (செவ்வாய்க்கிழமை) முதல் ஆமதாபாத்தில் காலவரையற்ற உண்ணாவிரதம் இருப்பேன்' என்று அவர் ஏற்கனவே அறிவித்து இருந்தார்.

ஆமதாபாத் திரும்பிய அவர் நேற்று தனது ஆதரவாளர்களையும், குஜராத்தில் உள்ள விசுவ இந்து பரிஷத்தின் முக்கிய தலைவர்களையும் சந்தித்து பேசினார். அந்த அமைப்பின் மாநில தலைமை அலுவலகத்தில் உண்ணாவிரதம் இருக்கும் திட்டத்தை இறுதி செய்வது பற்றி ஆலோசனை நடத்தினார். பின்னர் தொகாடியா நிருபர்களிடம் கூறியதாவது:–

கடந்த 4 ஆண்டுகளாக மத்திய அரசு மீது எனக்கு வெறுப்புணர்வு ஏற்பட்டு உள்ளது. உண்மையில் அது குஜராத்தில் 2002 சம்பவங்களுக்கு பிறகு மெதுவாக தொடங்கியது. கோத்ரா வன்முறைக்கு பிறகு ஏராளமான இந்துக்கள் போலீஸ் துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்டனர். நரேந்திர மோடி முதல்வராக இருந்தபோது இது எப்படி நடந்தது என்பது எனக்கு புரியவில்லை. ஆயிரக்கணக்கான இந்துக்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

2014 பாராளுமன்ற பொதுத்தேர்தலில் விசுவ இந்து பரிஷத் நரேந்திர மோடிக்கு முழு ஆதரவு அளிக்க முன் வந்தது. ஆனால் அவர் குண்டர்களுக்கு அழைப்பு விடுத்தார். அவரது அறிவிப்புக்கு பின்னர் 11 பசு பாதுகாவலர்களுக்கு ஜார்கண்டில் ஆயுள் தண்டனை (கோர்ட் உத்தரவு) விதிக்கப்பட்டது. காங்கிரஸ் அரசில் கூட இது நடக்காது.

இந்துக்கள் நலனுக்காகவும், அயோத்தியில் ராமஜென்மபூமி கோவில் கட்டவும், தேசிய அளவில் பசுக்கள் வெட்டப்படுவதை தடுக்கக் கோரியும், பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தக்கோரியும் உண்ணாவிரதம் நடத்த உள்ளேன்.

இவ்வாறு அவர் கூறினார்.



மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாளை முன்னிட்டு ஆயிரம் விளக்கு பகுதி 117 வது கிழக்கு வட்ட செயலாளர் பி.ஆறுமுகம் (எ) சின்னையன் தலைமையில், கே.வீரப்பன்,ஜி.மணி ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா மார்பளவு புதுப்பிக்கப்பட்ட சிலைகளை பாடநூல் கழக தலைவரும், அண்ணா தி.மு.க. இலக்கிய அணி செயலாளருமான பா.வளர்மதி, வா.மைத்ரேயன் எம்.பி., அமைப்பு செயலாளர் ஆதிராஜாராம், ஆர்.கமலக்கண்ணன் ஆகியோர் திறந்து வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

# கவர்னரின் பிறந்த நாள்: மலர்க்கொத்து அனுப்பி எடப்பாடி பழனிசாமி வாழ்த்து

சென்னை, ஏப். 16–

தமிழக முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி, இன்று (16ந் தேதி) கவர்னர் பன்வாரிலால் புரோகித்தின் பிறந்த நாளையொட்டி மலர்கொத்துடன் வாழ்த்துக் கடிதம் அனுப்பினார்.

அந்தக் கடிதத்தின் விபரம் வருமாறு:–

''இன்று உங்களின் மகிழ்ச்சிகரமான பிறந்தநாளில் உங்களுக்கு எனது இதயங்கனிந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்ல தேக ஆரோக்கியத்தோடும், அமைதியோடும் நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை புரிய நீண்ட ஆயுளைத் தருமாறு ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்''

இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார். அப்போது தனக்கு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்த தமிழக முதலமைச்சருக்கு தனது நன்றியை கவர்னர் தெரிவித்துக் கொண்டார்.


**எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்**

CIN: L65100TN2007PLC064069

பதிவு அலுவலகம்: 410A, 4வது மாடி, ஸ்பென்ஸர் ப்ளாசா, ஃபேஸ் 2, எண். 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 2.

தொ.பே: 044-42995000 | தொலைநகல்: 044-42995050

www.equitas.in | மின் அஞ்சல்: secretarial@equitas.in

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015–ன், விதி 29 மற்றும் விதி 47ன் படி, மார்ச் 31, 2018 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் நிதியாண்டுக்கான தனிப்பட்ட மற்றும் ஒட்டு மொத்த தணிக்கை செய்யப்பட்ட நிதி நிலை முடிவுகள் மற்றும் இதர விஷயங்களைப் பரிசீலிக்க, ஏப்ரல் 27, 2018 வெள்ளிக்கிழமை அன்று நிறுவன இயக்குனர்களின் கூட்டம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு, நிறுவனத்தின் இணையதளம் www.equitas.in மற்றும் பங்குச் சந்தை இணையதளங்களில் www.bseindia.com மற்றும் www.nseindia.com உள்ளது.

எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்க்காக (ஒப்பம்)

இடம்: சென்னை

தேதி: ஏப்ரல் 16, 2018

திருமதி. ஜெயஸ்ரீ சு அய்யர், நிறுவன செயலர்